செ.வெ.எண்:87 நாள்:31.10.2017

**பத்திரிக்கை செய்தி**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (31.10.2017) ஓய்வுற்றோர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஓய்வுதியர்களின் குறைகளை கேட்டறிந்தார். கோரிக்கைகள் தொடர்பாக பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் உடனடியாக தீர்வு காணப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவரால் திருமதி.அன்னலட்சுமி, திரு.நல்லபெருமாள் ஆகியோர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதிக்கான தொகை ரூ.50000/-க்கான காசோலையும் , திரு. எஸ்.சீனிவாசன் என்பவருக்கு குடும்ப நல நிதிக்கான தொகை ரூ.7200/-க்கான காசோலையும் வழங்கப்பட்டது. ஓய்வூதியர் கூட்டத்தில் சென்னை ஓய்வூதிய இயக்க இணை இயக்குநர் திருமதி எஸ். மஞ்சுளா,. துணை இயக்குநர் திரு.கி..மதிவாணன்., மாவட்ட கருவூல அலுவலர் திரு அருணாசல சுந்தரம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்கு) திரு. ஜவஹர் சிந்தா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.